**வணக்கம்**

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் சரவண குமார்

தேதி 2.4.2024 நேரம் மாலை 6.10 மணி

---

<u>தலைப்புச் செய்திகள்</u>

- மேற்குவங்கம், உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா, ஒடிசா உள்ளிட்ட 6 மாநிலங்களுக்கு, தேர்தல் ஆணையம், சிறப்பு பார்வையாளர்களை நியமித்துள்ளது.
- தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 3-ஆவது பதவிக் காலத்தில், உலகின் 3-ஆவது மிகப் பெரிய பொருளாதாரமாக இந்தியா மேம்படும் என்று, மூத்த பிஜேபி தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி கூறி உள்ளார்.
- புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன், இன்று, ஆயி மண்டபம், மற்றும், கீழூர் நினைவிடத்தை நேரில் சென்று பார்வையிட்டார்.
- புதுச்சேரியில் வாக்காளர் தகவல் சீட்டு வழங்கும் பணிகள், வரும் 5-ஆம் தேதி முதல், 14-ஆம் தேதி வரை நடைபெறும் என, தலைமை தேர்தல் அதிகாரி திரு ஜவகர் தெரிவித்துள்ளார்.

***<u>பார்வையாளர்</u>***

7 கோடிக்கும் மேல் மக்கள் தொகை கொண்ட மேற்குவங்கம், உத்தரபிரதேசம், மகாராஷ்டிரா, மற்றும் பீகார் மாநிலங்களுக்கும், மக்களவை தேர்தலுடன் சேர்த்து, சட்டமன்ற தேர்தலும் நடைபெற உள்ள ஆந்திரப் பிரதேசம், ஒடிசா ஆகிய மாநிலங்களுக்கும், தேர்தல் ஆணையம் சிறப்பு பார்வையாளர்களை நியமித்துள்ளது. தேர்தல் நடைமுறைகள் அனைவருக்கும் சமமான நியாயத்துடன் மேற்கொள்ளப்படுவதை

உறுதிப்படுத்தும் வகையில், தேர்தல் பணியாளர்கள், பாதுகாப்பு படையினர் மற்றும் வாக்குப் பதிவு இயந்திரங்களை, எவ்வித பாகுபாடும் இன்றி ரேண்டம் முறையில் ஒதுக்கீடு செய்யும் பணிகளை மேற்பார்வையிடும் பொறுப்பு, இந்த சிறப்பு பார்வையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவர்கள் அந்தந்த மாநிலத்தின் தலைநகரில் தங்கி - அல்லது அவசியப் பட்டால் - பதற்றமான பகுதிகளில் இருந்து, தேவையான ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்வார்கள் என்றும், குறிப்பாக எல்லைப்புற பகுதிகள் மீது, இவர்கள் சிறப்பு கவனம் செலுத்துவார்கள் என்றும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு ஏஜன்சிகளின் நோடல் அதிகாரிகள் மற்றும் மண்டல அதிகாரிகளிடம் இருந்து, தேர்தல் தொடர்பான தகவல்களை இவர்கள் கோரிப் பெறுவார்கள் என்றும், தெரிவிக்கப்பட்டுள்ளது. தேர்தலின் போது பண பலத்தின் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் வகையில் ஆந்திரா, கர்நாடாக,தமிழ்நாடு, உத்தரபிரதேஷ், ஒடிசா ஆகிய மாநிலங்களுக்கு தேர்தல் ஆணையம் ஏற்கனவே, சிறப்பு செலவின பார்வையாளர்களை நியமித்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

***<u>மோடி-உத்தராகண்ட்</u>***

தேசிய ஜனநாயக கூட்டணி அரசின் 3-ஆவது பதவிக் காலத்தில் உலகின் 3-ஆவது மிகப் பெரிய பொருளாதாரமாக இந்தியாவை மேம்படுத்தும் உறுதிப் பாட்டை, மூத்த பிஜேபி தலைவரும் பிரதமருமான திரு நரேந்திர மோடி மீண்டும் வலியுறுத்தி உள்ளார். உத்தராகண்ட் மாநிலத்தில், நைனிடால் உத்தம்சிங்நகர் மாநிலங்களவை தொகுதிக்கு உட்பட்ட ருத்ராபூரில் இன்று தமது முதலாவது தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில் அவர் பேசுகையில், உத்தராகண்ட் மாநிலத்தின் வளர்ச்சிக்கு தமது அரசு மேற்கொண்ட முயற்சிகளையும் பட்டியலிட்டுக் காட்டினார். குடியுரிமை சட்ட திருத்தம் மூலமாக இந்திய குடியுரிமை வழங்கப்படுவதை காங்கிரஸ் எதிர்ப்பது, தேச நலன்களை புறக்கணிப்பதாகும் என்று

திரு நரேந்திர மோடி குற்றம் சாட்டினார். பிஜேபி மீண்டும் ஆட்சிக்கு வந்தால் ஊழலுக்கு எதிரான முயற்சிகளை துரிதப்படுத்தும் என்றும் அவர் தெரிவித்தார். இத்தொகுதியில் பிஜேபி வேட்பாளராக போட்டியிடும் மத்திய இணை அமைச்சர் திரு அஜய்பட் உள்ளிட்டோர் பிரச்சாரத்தில் கலந்து கொண்டனர்.

*__மோடி-ராஜஸ்தான்__*

உத்தராகண்டை தொடர்ந்து, ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூர் ஊரக தொகுதிக்கு உட்பட்ட கோட்புத்லி நகரில் இன்று பிற்பகல் நடைபெற்ற தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்திலும் திரு நரேந்திர மோடி உரையாற்றினார். ராஜஸ்தானில் பிரதமரின் இந்த முதலாவது தேர்தல் பிரச்சாரப் பொதுக் கூட்டத்தில், பிஜேபி வேட்பாளர் திரு ராவ் ராஜேந்திர சிங் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

*__காங்கிரஸ்__*

கச்சத்தீவு பற்றி உரக்க பேசுவோர், சீனாவைப் பற்றி பேசவே அஞ்சுவதாக, காங்கிரஸ், பாரதிய ஜனதா மீது விமர்சனம் வெளியிட்டுள்ளது. மூத்த காங்கிரஸ் தலைவர் திரு மணீஷ் திவாரி இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசுகையில், சீன துருப்புக்கள் இந்திய எல்லைக்குள் ஊடுருவி சுமார் 4 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும் அரசு மவுனம் காப்பதாக கூறினார். கச்சத்தீவு பற்றி பேசுவோர், 1971-ல் உலகின் பூகோளத்தையே மாற்றியவர், முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி என்பதை மறந்து விட்டதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

***ராதாகிருஷ்ணன்-***

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் சிபி ராதாகிருஷ்ணன், வரலாற்று சிறப்பு மிக்க கீழூர் நினைவிடத்தை இன்று நேரில் சென்று பார்வையிட்டார். சுற்றுலாத் துறை மூலம் நினைவிடத்தை மேம்படுத்தவும், கீழூர் வாக்கெடுப்பில் கலந்து கொண்ட விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான நினைவு தூணை அழகுபடுத்தவும் அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார். புதுச்சேரியில் விடுதலைப் போராட்ட வரலாறு எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்ள, உரிய ஏற்பாடுகளை மேற்கொள்ளவும் அவர் கேட்டுக் கொண்டார். கீழூர் வாக்கெடுப்பில் கலந்து கொண்ட 178 பேரில் 170 பேர், பிரஞ்ச் ஆட்சிக்கு எதிராகவும், இந்திய திருநாட்டுடன் இணைவதற்கு ஆதரவாகவும், வாக்களித்ததை வைத்துப் பார்க்கையில் அவர்களின் விடுதலை வேட்கை மற்றும் தேசப் பற்றை புரிந்து கொள்ள முடிவதாக நினைவிடத்தின் வருகையாளர் புத்தகத்தில் அவர் பதிவிட்டார். கலை-பண்பாட்டுத் துறை செயலர் திரு நெடுஞ்செழியன், துறையின் இயக்குநர் திரு கலிய பெருமாள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

தொடர்ந்து பாரதிபூங்காவில் உள்ள ஆயி மண்டபத்தையும் துணை நிலை ஆளுநர் பார்வையிட்டு பூங்கா சூழலை மேம்படுத்தவும், அங்குள்ள வரலாற்று சின்னங்கள் பற்றிய குறிப்புகளை பொது மக்கள் அறியும் படியாக எழுதி வைக்கவும் அறிவுறுத்தினார். புதுச்சேரியை பசுமை நகரமாக மாற்றுவதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு உள்ளாட்சித் துறை அதிகாரிகளை அவர் கேட்டுக் கொண்டார். உள்ளாட்சித் துறை இயக்குநர் திரு சக்தி வேல், புதுச்சேரி நகராட்சி ஆணையர் திரு கந்தசாமி ஆகியோர் உடன் இருந்தனர்.

**<u>ஜவகர்</u>**

புதுச்சேரியில் வாக்காளர்களின் வீடுகளுக்கே சென்று வாக்காளர் தகவல் சீட்டு வழங்கும் பணிகள், வரும் 5-ஆம் தேதி தொடங்கி, 14-ஆம் தேதி வரை நடைபெறும் என தலைமை தேர்தல் அதிகாரி திரு ஜவகர் தெரிவித்துள்ளார். இன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் கருத்தரங்க கூடத்தில், அரசியல் கட்சி பிரதிநிதிகள், வேட்பாளர்கள் மற்றும் வாக்குச் சாவடி முகவர்களுடன் நடத்திய கலந்துரையாடலில் அவர் இதைத் தெரிவித்தார். வாக்காளர் தகவல் சீட்டுகள், வாக்குச்சாவடி அதிகாரிகள் மூலம் விநியோகிக்கப்படும் என்றும், இதில் வாக்குச்சாவடி முகவர்களின் பங்களிப்பும் இருந்தால் வெளிப்படைத் தன்மை மேம்படும் என்றும் அவர் கூறினார்.. கைக் குழந்தைகளோடு வரும் பெண்கள் வாக்களிக்க ஏதுவாக, குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் வசதி உள்ளிட்ட கூடுதல் வசதிகளுடன், மாதிரி வாக்குச் சாவடிகள் ஏற்படுத்தப் பட்டுள்ளதாக, தலைமை தேர்தல் அதிகாரி தெரிவித்தார். மாகே பகுதியில் அனைத்து வாக்குச் சாவடிகளும், பெண் அலுவலர்களால் நிர்வகிக்கப்படும் என்றும், ஒவ்வொரு பிராந்தியத்திலும் தலா ஒரு வாக்குச் சாவடியில் மாற்றுத் திறனாளி ஊழியர்கள் மட்டுமே பணி அமர்த்தப்படுவார்கள் என்றும் அவர் கூறினார். பார்வை குறைபாடு உள்ள வாக்காளர்கள் பிரெய்லி முறையில் வாக்களிக்கும் வசதி அனைத்து வாக்குச்சாவடிகளிலும் உள்ளதாக அவர் தெரிவித்தார். மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு குலோத்துங்கன், துணைத் தலைமை தேர்தல் அதிகாரிகள் திரு தில்லைவேல், திரு ஆதர்ஷ், மாவட்ட துணைத் தேர்தல் அதிகாரி திரு வினயராஜ் உள்ளிட்டவர்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

## <u>கூடுதல் இயந்திரம்</u>

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில் 26 வேட்பாளர்கள் போட்டியிடுவதால், கூடுதல் வாக்குப் பதிவு இயந்திரங்களை, தேர்தல் ஆணையத்தின் மென்பொருள் மூலம் சுழற்சி முறையில், தற்செயல் கலப்பு செய்யும் பணிகள், மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு குலோத்துங்கன் முன்னிலையில் இன்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற இப்பணிகளின் போது வேட்பாளர்கள் மற்றும் அவர்களது முகவர்களும், பல்வேறு அரசியல் கட்சி பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி மக்களவைத் தொகுதியில், ஊனத்தின் தன்மை 40 சதவிகிதத்திற்கு மேல் உள்ள மாற்றுத் திறனாளிகள், 85 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள், மற்றும், அத்தியாவசியப் பணிகளில் உள்ள ஊழியர்கள் என, மொத்தம் 2 ஆயிரத்து 974 பேர், வீட்டில் இருந்தே தபால் ஓட்டு போட விண்ணப்பித்து, அனுமதி பெற்றுள்ளதாகவும், காரைக்கால் நீங்கலாக இதர பகுதிகளில், இவர்கள் வீட்டில் இருந்தே ஓட்டு போடும் பணிகள் இன்று தொடங்கி இருப்பதாகவும், மாவட்ட தேர்தல் அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது. இப்பணிகள் வரும் 5-ஆம் தேதி வரை நடைபெறும் என்றும், காரைக்கால் பகுதியில் வரும் 4, 5 ஆகிய தேதிகளில் இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தேவைப்பட்டால் 6-ஆம் தேதி வரை நீட்டிக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. புதுச்சேரியில், 2 வாக்குச் சாவடி அலுவலர்கள் ஒரு நுண் பார்வையாளர். ஒரு பாதுகாவலர், மற்றும் ஒரு புகைப்படகாரர் அடங்கிய குழுவினர், தகுதி உள்ள வாக்காளர்களின் வீட்டிற்கே நேரில் சென்று, தபால் வாக்குகளை சேகரித்து வருகின்றனர்.

### தேர்தல் வருமானவரி

தமிழ்நாடு-புதுச்சேரி பகுதிகளுக்கான, வருமான வரித் துறையின் புலனாய்வுப் பிரிவு தலைமை இயக்குநர் அலுவலகம், மக்களவைத் தேர்தலை முன்னிட்டு, 24 மணி நேரமும் செயல்படக் கூடிய, பிரத்யேகமான கட்டுப்பாட்டு அறை ஒன்றை அமைத்துள்ளது. தேர்தல் செலவுகளை கண்காணிப்பதில், தேர்தல் ஆணையம், வருமான வரித் துறைப் புலனாய்வுப் பிரிவின் உதவியை நாடியதன் அடிப்படையில் இந்தக் கட்டுப்பாட்டு அறை தொடக்கப்பட்டுள்ளது. தேர்தல் காலத்தில் பண விநியோகம் அல்லது பொருள் விநியோகம் குறித்து தகவல் தெரிவிக்க விரும்புவோர், 1800 425 66 69 என்னும் கட்டணமில்லா தொலைபேசி எண்ணில், கட்டுப்பாட்டை அறையை தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம் என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

### இயந்திரம்

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், இந்தியாவின் தேர்தல் நடைமுறைகளில் புரட்சிகரமான மாற்றங்களை ஏற்படுத்தி உள்ளன. காகித வாக்குச் சீட்டுகளுக்கு பதிலாக மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்துவதால், டன் கணக்கில் காகிதத்தை சேமிக்கவும், மரங்களைப் பாதுகாக்கவும், தேர்தல் செலவை குறைக்கவும், வாக்கு எண்ணும் பணிகளை துரிதமாக்கவும் ஏதுவாகி உள்ளது. இதைவிட முக்கியமாக ஒருவருக்கு ஒரு ஓட்டு என்பதை உறுதிப்படுத்தவும், செலுத்தப்பட்ட வாக்குகளை பாதுகாப்பாக வைப்பதன் மூலம் தேர்தல் முறைகேடுகளை தவிர்க்கவும், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பெருமளவில் உதவி உள்ளன. மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் பேட்டரியால் இயங்கக் கூடியவை என்பதால், மின்சார வசதி குறைவாக உள்ள பகுதிகளிலும் இந்த இயந்திரங்களைப் பயன்படுத்த இயலும். மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் செலுத்தப்பட்ட வாக்கு சரியாக பதிவாகி உள்ளதா என்பதை வாக்காளர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள ஏதுவாக, விவி-பேட்

என்னும் காகிதத் தணிக்கை இயந்திரங்களும், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களோடு இணைந்து, தேர்தலில் பயன்படுத்தப் படுகின்றன. தேர்தல் ஆணையம் மேற்கொண்ட வெளிப்படையான இந்த சீர்திருத்தங்களால், இந்திய தேர்தல் நடைமுறைகளில், நம்பகத்தன்மை வலுவடைந்து இருப்பதும் குறிப்பிடத் தக்கது.

***ஐபிஎல்***

ஐபிஎல் கிரிக்கெட்டில், இன்று இரவு 7.30 மணிக்கு பெங்களூரில் நடைபெறும் போட்டியில் பெங்களூர்-லக்னோ அணிகள் மோத உள்ளன.நேற்று இரவு, மும்பை-ராஜஸ்தான் அணிகளுக்கு இடையே, மும்பையில் நடைபெற்ற போட்டியில், ராஜஸ்தான் அணி, 6 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

***மாவோயிஸ்ட்***

சத்தீஸ்கர் மாநிலத்தில் பழங்குடியினர் அதிகம் உள்ள பஸ்தார் பகுதிக்கு உட்பட்ட பீஜப்பூர் மாவட்டத்தில் கங்காளூர் வனப் பகுதியில் இன்று தேடுதல் வேட்டையில் ஈடுபட்டிருந்த கூட்டுப் பாதுகாப்பு படையினருக்கும், மாவோயிஸ்ட்டுகளுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில், 9 மாவோயிஸ்ட்டுகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். கொல்லப்பட்ட மாவோயிஸ்ட்டுகளின் உடல்களும் பல்வேறு ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளும் சம்பவ இடத்தில் இருந்து, கைப்பற்றப்பட்டுள்ளன. தேடுதல் வேட்டை தொடர்கிறது.

***அருணாச்சல பிரதேசம்***

அருணாச்சல பிரதேசத்தில் இடப் பெயர்களை சீனா மீண்டும் மீண்டும் மாற்றி அறிவிப்பதை, இந்தியா கண்டித்துள்ளது. புதுப் புதுப் பெயர்களை கண்டுபிடித்து வைப்பதால், அருணாச்சல பிரதேசம் இந்தியாவின் ஒரு பகுதி என்ற உண்மை மாறிவிடாது என்று, வெளியுறவு

அமைச்சகத்தின் செய்தி தொடர்பாளர் திரு ரண்தீர் ஜெய்ஸ்வால் கூறி உள்ளார். அருணாச்சல பிரதேசம் அன்றும், இன்றும், என்றும் இந்திய மாநிலம்தான் என்பதால், பெயர்களை மாற்றுவதால் எந்த பயனும் இராது என்று வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் ஏற்கனவே கூறி உள்ளார்.